

ஸ்ரீ

கலிக்கம்ப நாயனர்

ஸ்ரீ கலிக்கம்ப நாயனர் வரலாறு

வீ. இராமசுவாமி
ஆசிரியர் :
('கடவுள்' தெய்வீக மாதப் பத்திரிகை)

ஸ்ரீ கலிக்கம்ப நாயனர் மடாலயம்
பெண்ணுடம்
தெ. ஆ. மாவட்டம், 606 105.

முதற் பதிப்பு : ஏப்ரல்—1986.

விலை : விருப்பம்போல மடாலய காணிக்கையாக
(ரூ. 5-00க்கு குறையாமல்)

அச்சிட்டோர் :
ஆஷா அச்சகம்,
304, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை-5.
Phone : 844466

அணிந்துரை

திரு. P.M. நாமதேவ் செட்டியார் அவர்கள்

தலைவர்,
சென்னை வணிக வைசிய கல்யாண மண்டப நிருவாக சங்கம்

தலைவர்
பழநி புதுச்சேரியார் வாணியர் பொதுச் சத்திரம்.

எண்ணரிய பெருமைகள் வாய்ந்த பெண்ணாடம் பெருநகரில் அருமைமிகு வாணியர் குலத்தில் அவதரித்துச் சிவம் வளர்த்த சீலமுடையோராய் விளங்கிச் சித்தியெலாம் பெற்று முக்தி பெற்ற சிறப்புக்குரிய சிவனடியாராம் கலிக்கம்ப நாயனார் தம் பெருமை அளவிடற்கரியதாகும். அறுபத்து மூன்று நாயன்மார் களுள் ஒருவராக வைத்துப் 'பக்திச்சுவை நனிச் சொட்டச் சொட்டப் பாடிய கவிவல்லவர்' என்று புகழ்ந்து பேசப்பெறும் சேக்கிழார் பெருமான் தம்முடைய திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்துள் கலிக்கம்பநாயனார் வரலாற்றினை உளங்கனிந்து பாடி உயர்வளித்துள்ளார். அத்தகு பெருமை வாய்ந்த நாயனாரின் பெருமையை என்றும் நிலைநாட்டும் வண்ணம் ஸ்ரீகலிக்கம்ப நாயனார் என்னும் பெயரிய உயரிய இந்நூல் சைவப்பெருந்திருவினர் நம்மினத் தோன்றல் திரு. K. இளைய ராஜ்செட்டியார் அவர்களால் வெளியிடப் பெறுகின்றது. அருள் மிகு அழகிய காதலி உடனுறை அருள்மிகு கைவழங்கீசர் திருவருளால் ஸ்ரீகலிக்கம்ப நாயனார் மடாலயக் கட்டிடத்திற்குக் கால்கோள் நிகழும் நன்னாளில் இப்பொன்னூரில் வெளியிடப் பெறுவது மிக்க பொருத்தமுடையதாகும். பெண்ணாடம் தலப் பெருமை ஸ்ரீகலிக்கம்பநாயனார் புராணம் தேவாரப் பதிகங்கள் முதலானவை கொண்டு இந்நூலினை எழிலுறத் தயாரித்துத் திரு. K. இளையராஜ்செட்டியார் அவர்கள் தம்முடைய வளர்ப்புப் பெற்றோர்களாகிய பெண்ணாடம் வெ.ரெ. துரைசாமி செட்டியார், வள்ளியம்மை ஆகியோர் நினைவாக வெளியிட்டிருப்பது பெரிதும் போற்றத்தக்கது. அதுமட்டுமல்லாது தம்மு

டைய சொந்தச் செலவில் தயாரித்து வெளியிட்டிருக்கும் இவ் வரிய நூலினைப் பெற்றுக் கொள்பவர்கள் வழங்கும் நன்கொடை முழுவதும் ஸ்ரீகலிக்கம்பநாயனுர் மடாலயக் கட்டட நிதிக்கே சேர்க்கப் பெறும் என்ற செய்தி தேனுக இனிக்கிறது. நம்மி னத்து நாயனுரின் நற்பெயரால் அமையவிருக்கும் மடாலயத் திருப்பணிக்கு உதவும் வகையில் இந்நூலினைப் பெரும் பொருள் நன்கொடையுதவி அனைவரும் வாங்கி ஆதரிக்குமாறு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். சைவம் தழைக்க ஸ்ரீகலிக் கம்ப நாயனுர் புகழ் ஓங்க, திரு. K. இளையராஜ் முதலான மெய் யன்பர்களின் வாழ்வு செழிக்க எல்லாம்வல்ல முருகப் பெருமானை நினைந்து போற்றுகிறேன்.

அன்பன்

14-4-1986.

P. M. நாமதேவ்

பதிப்புரை

இவ்வுலகத்தில் ''பசி வந்திட பத்தும் பறந்து போகும்'' என்பது பழமொழி. அந்தப் பசியைப் போக்குவது எது? உணவு இந்த உணவு படைக்கப்பெற்றுவிட்டால், மனிதனுக்கு அன்பு, அமைதி, தொண்டு அனைத்தும் ஏற்பட்டுவிடும். இதன் அடிப் படையிலேயேதான் ''அன்பே சிவம்'' என்றனர் சான்றோர்கள்.

அத்தகைய அன்னப் படைப்பு தொண்டை தவறுமல் நாள் தோறும் செய்து, சிவனடியாருக்கு பாதம் கழுவி மலரிட்டு வணங்கி அமுது செய்வித்தல்தான் பெண்ணுகடத்திலே நம் வாணியர் குலத்திலே அவதரித்த கலிக்கம்பரின் தொண்டு.

ஒரு நாள் தன்னிடத்தில் முன்பு வேலை பார்த்த ஒருவர் சிவ னடியாராக இவரது இல்லத்திற்கு வருகை புரிந்தபோது பாதம் கழுவ மனைவி சிவனடியாரை முன்பு ''தம்மிடம் ஏவலராக இருந்தவரா!'' என ஐயுற்று மனதில் நினைத்த நேரம் கரம் நீர் வார்க்க தாமதித்த காரணத்தினுல் கலிக்கம்பர் தன் சிவத் தொண்டிற்கு ஊறு நேர்ந்ததாகக் கருதி, தன் மனைவியின் இரு கரங்களையும் தன் வாளால் வெட்டி சிவபூரணனின் திருவருளைப் பெற்றதோடு, தம் மனைவியின் இரு கரங்களையும் திரும்பப் பெற்றுர்.

பெண்ணுகடத்தில் எழுந்துள்ள இறைவனும் ''கைவழங் கீசனுனர்.''

இத்தகைய சிறப்புக்களைப் பெற்ற நாயனுருக்கு தனியே இவ் வூரில் மடாலயம்இல்லாத குறையைப் போக்க நம் குலமக்களால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு மனை வாங்கப் பெற்று, இது நாள் வரை பல்வேறு காரணங்களாலும், தடைகளாலும், கட்டப் படாமல் இருந்த மடாலாய கட்டிடத்திற்கு, தற்போது நம் குல பெரியவர் சென்னை உயர்திரு. பி. எம். நாமதேவ் செட்டியார் அவர்களால் அடிக்கல் நாட்டியும், நம் திருப்பணிக் குழு தலைவர்

விருத்தாசலம் திரு. சி. நாராயணசாமிசெட்டியார் அவர்களால் இம்மடாலய கட்டட திருப்பணி நன்கொடையைத் துவக்கி வைக்கவும் இருக்கிறார்கள்.

இத்தக்க நேரத்தில் தன் வளர்ப்பு பெற்றோர் திரு. வெ. ரெ. துரைசாமி செட்டியார்—வள்ளியம்மை நினைவாக நாயனாரின் வரலாற்றை புத்தக வடிவில் கொண்டு வர எண்ணங் கொண்டு நன்கொடையளித்து ஸ்ரீகலிக்கம்ப நாயனார் மடாலய வெளியீடாக வெளியிட உதவிய திரு. கே. இளையராஜு அவர்களை பாராட்டுகிறோம்.

மேலும் ஸ்ரீ கலிக்கம்ப நாயனாரின் மடாலய கட்டிட திருப்பணியில் பங்கு கொண்டு தொண்டு செய்கின்ற அனைத்து நம்குல மக்களுக்கும் ஏனையோருக்கும் பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், தொய்வின்றி மன்ம் தளராமல், எழுச்சியுடன் ஆர்வமுடன் தொண்டாற்றும் நம் குல இளைஞர்களுக்கும், குழுவினர் தமது மனப்பூர்வமான பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்வதோடு அவர்களுக்கு ஸ்ரீ கலிக்கம்ப நாயனாரின் திருவருள் கிட்ட இறைஞ்சுகின்றார்கள்.

இவ்வரலாற்று புத்தகத்தை வெளியிட தொகுத்தளித்த இவ்வூர் திரு. வீ. இராமசுவாமி அவர்களுக்கும், அச்சிட்ட சென்னை ஆஷா அச்சகத்தாருக்கும் எங்களது நன்றி.

இங்ஙனம்

பெண்ணாடம்
15.4.86 ஸ்ரீ கலிக்கம்ப நாயனார் மடாலய குழுவினர்

முன்னுரை

(பெண்ணாகடம் கலிக்கம்ப நாயனார்)

வாணியர் குலத்தினில் தோன்றிய கலிக்கம்ப நாயனார் அவர்கள் சீரிய நோக்கத்தோடு உறுதி குலையா நிலையை அடைந்த நாயனார் அவர்கள் தாமும், தம்மனைவியும் சேர்ந்து செய்ய வேண்டிய சிவனடியார் தொண்டினை மனைவி மறுக்க, மனைவியின் செயலை தாளாத நாயனார் தம் மனைவியின் இரு கரங்களையும் வெட்டி வீழ்த்திய செயலை கண்ட இறைவன், நாயனார் அவர்களின் உறுதியை பாராட்டி காட்சி கொடுத்த தோடு மனைவியின் இரு கரங்களையும் சேர்ப்பித்து ஆசிர்வதித் தார். என்னே, இறைவன் அன்பு! வாணியர் குலம் தழைக்க நாயனார் அவர்களின் சிறப்பு மேலோங்க செயல் புரிவோமாக !!

எஸ். நாராயணசாமி செட்டியார்

முன்னாள் செயலர்,
வணிக வைசிய சங்கம்
வளவனூர் அஞ்சல்
தெ. ஆ. மா வட்டம்.

சென்னை
12-4-86

திருப்பெண்ணுகடம்

ஸ்தல வரலாறு

தென்னுடுடைய சிவனே போற்றி என்று போற்றுகின்றநாம் சிவபெருமானுடைய பரிபூர்ணத்துவம் பெற்றுள்ள தென்னுடே போற்றி என்றும் போற்ற வேண்டும். இப்படிப்பட்ட தென்னுட்டில், நமது தமிழ்நாடு, சைவம் வேறு நாடுவேறு என்று பிரிக்க முடியாத அளவில், நாடும் சைவமும் பின்னிப் பிணைந்து, சிவ பெருமானின் அனுக்ரஹம் பொங்கி வழிந்து வந்துள்ளது.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று சொன்னுல் குடியிருக்க தமிழகத்தில் ஊரே இல்லை என்ற நிலையில், தமிழ்நாடு முழுமைக்கும் சிற்றூர் முதல் பேரூர் வரை ஒவ்வொரு ஊரிலும் ஆலயங்களை அமைத்து, சைவத்தைக் கொடி கட்டிப் பறக்கச் செய்திருக்கிறுர்கள் நம் முன்னேர்கள்.

முன்னேர்கள் என்ருல் இந்த இடத்தில் பெரும்பாலும் மன்னர்கள் என்றே கொள்ள வேண்டும்.

ஆம்!

அரசியல் செய்ய வந்த மன்னர்களெல்லாம் ஆலயம் எழுப்பினுர்கள். அருளியல் செய்ய வந்த நாயன்மார்கள் எல்லாம், ஆலயந்தோறும் சென்று பாடிப் பரவி அங்கே தெய்வ சாந்நித்யம் எழுப்பினுர்கள்.

இப்படி நாடு முழுமைக்கும் சைவம் தழைக்கச் செய்த நாயன்மார்கள், சேர, சோழ, பாண்டிய, நாட்டிற்கெல்லாம், தலையாய நடு நாடு என்று போற்றப்படும் நடுநாட்டுத் தலங்களை சற்று அதிகமாக பாடியிருக்கிறுர்கள் என்றே சொல்லவேண்டும்.

நடு நாட்டின்கண் திகழ்கின்ற, பெண்ணுடம் என்று இன்று வழங்கப்படும் திருப்பெண்ணுவுகடம் என்ற திருத்தலம் காலத்தால் போற்றப்பட்டு வரும் ஒரு சிறப்புமிக்க பெருந்தலமாகும்.

இந்தத் திருத்தலத்திலே தான், சைவம் செய்ய வந்த நமது சந்தானாச்சார்யர்கள் நால்வரில், சைவத்தை தத்துவமாக்கித் தூக்கி நிறுத்திய ஸ்ரீமெய்கண்ட தேவர், மற்றுமொரு சந்தானாசார்யர் ஸ்ரீமறைஞானசம்பந்தம், அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான ஸ்ரீகலிக்கம்ப நாயனார். ஆகிய மூவரும் அவதரித்துள்ளார்கள்.

நாவுக்கரசுபெருமான் சைவத்தினின்றும்தடம் புரண்டு, பின் மீண்டும் சைவத்தின் அடி சேர்ந்தபோது, இறைவனால் இடபக் குறி பொறித்து தடுத்தாட்கொண்ட தலமும் இதுவே.

கலிக்கம்பர் தம் தேவியரின் கரம் களைந்தபோது, அவருக்கு கரம் ஈந்து ''கை வழங்கீசர்'' எனப் பெயர் பெற்று இறைவன் அருள் பாலிப்பதும் இந்தத் திருத்தலத்திலேதான்.

இந்தத் தலம் விருத்தாசலம் என இன்று வழங்கும் திருமுதுகுன்றம் நகருக்கு தென்மேற்கே சுமார் பத்துக் கல் தொலைவில் வெள்ளாற்றின் வடபால் அமைந்துள்ளதாகும்.

தில்லை மூவாயிரம் கடந்தை ஆராயிரம் என வழங்கிய இந்தப் பெரும் பதியின் நடுநாயகமாக வீற்றிருக்கிறார் ஸ்ரீபிரளய காலேஸ்வரர். நகரத்தைப் பிரளயம் விழுங்கும்தருணத்தில்தமது அதிகார நந்தியை அனுப்பி பிரளயத்தை விழுங்கச் செய்தார் ஈஸ்வரன். அதனாலே அவருக்கு ஸ்ரீபிரளய காலேஸ்வரர் என்ற திருநாமமும் நிலைப்பதாயிற்று. இதன் காரணமாக ஆலயத்தின் அதிகார நந்தியின் முகம் கிழக்கு நோக்கி அமைந்திருப்பதை இன்றும் காணலாம்.

தேவலோகத்தில் தேவேந்திரன் பூஜைக்கு, புஷ்பங்களை கொய்து வர தேவகன்னிகைகள் இந்த பூவுலகிற்கு அனுப்பப் படும்போது, நமது பெண்ணாடம் அன்று பிரம்மாண்டமான நந்தவனமாக காக்ஷியளித்து, பூத்துக் குலுங்கி பூக்காடாய் மணந்திருந்ததாம்.

மலர் பறிக்க வந்த தேவ மங்கையர்கள், வந்தவேலை முடிந்து திரும்புங்கால், அங்கே ஒரு அழகிய சிவலிங்கத்தைக் கண்டதாகவும் கண்ட கன்னிகைகள் மெய் மறந்து நின்று அந்த லிங்கத்திடம் பக்தி செலுத்தி, தாங்கள்கொய்த மலர்களையெல்லாம் அந்த சிவலிங்கத்திற்கே அர்ச்சித்து நின்றுவிட்டார்கள்.

தேவலோகம் ஒன்று இருப்பதாகவும் அங்கிருந்துதான் தாங்கள் அனுப்பப் பட்டோம் என்பதையும் மறந்து இறைவனை அர்ச்சித்துக் கொண்டே இருந்துவிட்டார்கள்.

நீண்ட நெடுநேரமாகியும் மலரெடுக்கச் சென்ற மங்கையர் களைக் காணுமல் போகவே, தேவேந்திரன் தனது காமதேனுவை அனுப்பி அழைத்து வரச் செய்கிறுன்.

பூலோகம் வந்த காமதேனு, நந்தவனத்தின் கண் நங்கையர் நின்று மலர் பறிப்பதை விடுத்து, பறித்த மலர்களை அர்ச்சித்துக் கொண்டிருந்ததைக் கண்டு ஆச்சர்யப்பட்டது. அருகே சென்று பார்த்தபோது தான் தானும் காண முடிந்தது அந்த லிங்கேசனை.

கண்ட காமதேனு, தான் கண்டது ஒரு சாதாரண லிங்க மல்ல வென்றும் பூலோகத்தின் கண் கண்ட தெய்வமாய் காக்ஷி தரும் கடவுளே என்றும் புரிந்து கொண்டது.

லிங்கேசன் அருகே சென்றது. இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் பொருட்டு தனது காம்புகளால் தானே பிரவஹித்து பால் சொரிந்து லிங்காபிஷேகம் செய்த வண்ணமே நின்று கொண்டிருக்கிறது.

அந்தக் காமதேனு தன்னுல் வர்ஷிக்கப்பட்ட பால் சிவ லிங்கத்தை குளிர வைப்பதைக் கண்டு தானே குளிர்ந்தது. இப்படி சொரிந்த பால் அந்த லிங்கத்திற்குப் பக்கத்தில் தேங்கி ஒரு புஷ்கரணியாகி அதுவே ஆலயத்திற்கு மேற்புரம் கபிலை தீர்த்தம் என்ற பெயரில் இன்றும் விளங்கி வருகிறது.

தேவேந்திரனுக்கு ஒன்றும் புரியாமல் தவித்தான். மலர் கொய்யச் சென்ற கோதையரும் வரவில்லை; அவர்களைத் தேடிச் சென்ற கோமாதாவும் திரும்பவில்லை. இதனுல், தான் செய்யும் பூஜையும் தாமதமாகிறது.

செய்வதறியாது திகைத்த இந்திரன், தன்னுடைய வெள்ளை யானையை அழைத்து நீ உடனே பூலோகம் சென்று அவர்கள் எங்கிருந்தாலும் தேடிப் பிடித்து அனைவரையும் அழைத்துக் கொண்டு, சேகரித்த புஷ்பங்களையும் சுமந்து கொண்டு உடனே வந்து சேருவாயாக என உத்தர விட்டான்.

பூவுலகில் எல்லா பகுதிகளையும் தேடித் திரிந்து வந்த யானை, கடந்தை நகர் சேர்ந்ததும் தேவலோக மாதர்கள் ஒரு அதிசய லிங்கத்தின் முன் நின்று தாம் கொய்த மலர்களால் அர்ச்சிப் பதையும் தேவலோகக் காமதேனு அருகே நின்று லிங்கத்திற்கு பாலை தானே சுரந்து அபிஷேகிப்பதையும் கண்ணுல் கண்டு பிரமித்து நின்று விட்டது.

தேவேந்திர மன்னனின் கட்டளையை மறந்து, தான் வந்த காரிடம் என்ன என்பதை ஒரு சிறிதும் கருத்தில் கொள்ளாமல், லிங்கத்தை தரிசித்த படியே ஒரு கணம் ஸ்தம்பித்து நின்று விட்டது. அதன் பின் தன் நிலை உணர்ந்த வெள்ளையானை அந்த லிங்கேசனுக்கு, தான் என்ன செய்ய வேண்டும் என்பதை யோசித்தது.

அர்ச்சனையும், அபிஷேகமும் சதிரவனின் உக்ரமான வெய்யிலில் நிகழ்ந்து கொண்டிருந்தது. வெள்ளையானை மெல்ல நகர்ந்து இறைவன் அருகே சென்று, லிங்கத்திற்கு மேலே நாற் புறமும் தனது நான்கு கால்களையும் தூண்களாக்கி, தானே தன்னை ஒரு மண்டபமாக்கிக் கொண்டு நின்று விட்டது. இன்றும் இந்த திருத்தலத்தின் கர்ப்பக்கிரஹம் நீண்ட சதுரத்தில் திருத் தூங்கானை மாடம் என்றே பெயர் பெற்று விளங்குகிறது.

தேவலோகத்திலிருந்து இந்திரனால் அனுப்பப்பட்ட கன்னிய ரும், காமதேனுவும், வெள்ளை யானையும் பூலோகம் வந்து, வெள் ளாற்றின் கரையில் வீற்றிருந்த சிவபெருமானைப் பார்த்த மாத் திரத்திலேயே அவரவர்கள் வந்த கடமையை மறந்து, கண்ட காக்ஷியிலேயே லயித்து இறைவனுக்குத் திருப்பணி செய்து நிலைத்துவிட்டனர். பூலோகம் சென்ற இந்த முத்தரத்தினரும் திரும்பாதது கண்ட தேவேந்திரன், தானே புறப்பட்டு பூவுலகு சேர்ந்து, எங்கெல்லாமோ தேடி இறுதியில் இவர்கள் இருந்த இடம் சேர்ந்து, அவர்கள் லயித்துப் போனதை கண்ணுரக் கண் டான். அவனும் அதற்கு விலக்கல்ல என்ருகி, லிங்கத் திற்கு பூஜை செய்து, தனது உற்ற பரிவாரங்களுடன் தேவலோ கம் சேர்ந்தான். பௌராணிகர் நமக்குக் காட்டிய புராணம் இதுவே. இன்றைய ஸ்தல புராணமும் இதுவேயாகும்.

புராண காரணமாகவே, இந்த ஸ்தலத்தின் பெயர் பெண்—ஆவு—கடம் = பெண்ணுவுகடம் என அமைந்த, பின் காலப் போக்கில் பெண்ணுகடமாகி, இன்று பெண்ணுடம் என்று ஆகியுள்ளது. இனிஇதுவே நிலைக்கும் என நம்புவோம். (பெண்— தேவகன்னிகை, ஆவு—பசு, கடம்—யானை மூவினமும் பூஜித்த தால் பெண்ணுவு கடம்.)

Kalikkamba Naayanaar

''Pennaagadam'' was an ancient place in which the inhabitants walked the path of righteousness discharging faithfully their respective duties. Kalikkambar was a 'merchant' devotee of the Lord of the matted tresses who worshippea at the shrine shaped like a sleeping tusker. He would feast fellow-devotees with sumptuous food of varied dishes and also give them what all monetary aid they needed.

One day as usual, he first sought to wash the feet of the coming guests ceremonially. His consort had prepared earilier all the dishes to be served in the feast and then come with the vessel of water to pour into his palms. Suddenly she noticed that one devotee had previousy been a servant in her houseold and hesitated to aid her husband in doing the honour for this guest devotee. Understanding this, Kailkkambar seized a sword and studiously cut asunder the hand that held the water vessel Then he bathed the feet of the guest, with holy water and himself arranged for the proper feeding of all the devotees, without any disturbing thought in his mind. Continuing in such service, he reached in due course the feet of his lord

Kaliya Naayanaar

This devotee was born in Thiruvotriyoor in Thondainadu in a wealthy family of the oil-monger class. He spent lavishly to build a shrine for his lord. His special service was to keep lamps burning always both out side and inside the shrine. His wealth wasted away thus. like all 'karmas' good and bad! Then he earned wages even by doing labour for other oil-mongers and continued his 'lighting' service. But this employment too was denied him soon. Then he thought of selling his own chaste wife for household service under others, but there was no takers. So he resolved to keep the light within the shrine burning with his own blood serving as oil! When he was about to cut his own neck, the Lord grasped his hand and giving 'darshan' riding on his bull moment took him to dwell for ever in Sivapuri.

பெரியபுராணத்தில் ஸ்ரீ சேக்கிழார் பெருமான் அருளிய

ஸ்ரீ கலிக்கம்ப நாயனூர்

பற்றிய பாக்கள்

உரிமை யொழுக்கந் தலைநின்ற வுயர்தொன் மரபி னீடுமனைத்
தரும நெறியால் வாழ் குடிக டழைத்து வளரும் தன்மையதாய்
வருமஞ் சுறைவு மலர்ச்சோலை மருங்கு சூழ்ந்த வளம்புறவிற்
பெருமை யுலகு பெறவிளங்கு மேல்பாற் பெண்ணா கடமூதூர்.

மற்றப் பதியி னிடைவாழும் வணிகர் குலத்து வந்துதித்தார்
கற்றைச் சடையார் கழற்காத லுடனே வளர்ந்தகருத்துடையார்
அற்றைக் கன்று தூங்கானை மாடத் தமர்ந்தா ரடித்தொண்டு
பற்றிப் பணிசெய் கலிக்கம்ப ரென்பார் மற்றோர் பற்றில்லார்.

ஆன வன்பர் தாமென்று மரனா ரன்பர்க் கமுது செய
மேன்மை விளங்கும் போனகமும் விரும்பு கறிநெய் தயிர்தீம்பால்
தேனி னினிய கனிகட்டி திருந்த வமுது செய்வித்தே
ஏனை நிதியம் வேண்டுவன வெல்லா மின்ப முறவளிப்பார்

அன்ன வகையாற் றிருத் தொண்டு புரியு நாளி லங்கொருநாள்
மன்னு மனையி லமுது செய வந்த தொண்டர் தமையெல்லாம்
தொன்மை முறையே யமுதுசெயத் தொடங்கு விப்பா ரவர் தம்மை
முன்ன ரழைத்துத் திருவடிகளெல்லாம் விளக்க முயல்கின்றார்

திருந்து மனையார் மனையெல்லாந்திகழ விளக்கிப் போனகமும்
பொருந்து சுவையிற் கறியமுதும் புனிதத் தண்ணீ ருடன்மற்றும்

அருந்து மியல்பி லுள்ளனவு மமைத்துக் கரக நீரளிக்க
விரும்பு கணவர் பெருந்தவர் தாளெல்லாம் விளக்கும்
பொழுதின் கண்

முன்பு தமக்குப் பணிசெய்யுந் தமரா யேவல் முனிந்துபோய்
என்பு மரவு மணிந்த பிரா னடியா ராகி யங்கெய்தும்
அன்ப ருடனே திருவேடந் தாங்கி யணைந்தா ரொருவர்தாம்
பின்பு வந்து தோன்றவவர் பாதம் விளக்கும் பெருந்தகையார்

கையா லவர்தம் மடி பிடிக்கக் காதன் மனையார் "முன்பேவல்
செய்யா தகன்ற தமர்போலு" மென்று தேரும் பொழுதுமலர்
மொய்யார் வாசக் கரகநீர் வார்க்க முட்ட, முதற்றொண்டர்
மையார் கூந்தன் மனையாரைப் பார்த்து மனத்துட்கருதுவார்

வெறித்த கொன்றை முடியார்தம் மடியா ரிவர்முன் மேவுநிலை
குறித்து வெள்கி நீர்வாரா தொழிந்தா" ளென்று
மனங்கொண்டு
மறித்து நோக்கார் வடிவாளை வாங்கிக் கரகம் வாங்கிக் கை
தறித்துக் கரக நீரெடுத்துத் தாமே யவர்தாள் விளங்கினர்

விளக்கி யமுது செய்வதற்கு வேண்டு வனதா மேசெய்து
துளக்கில் சிந்தை யுடன்றொண்டர் தம்மை யமுது செய்வித்தார்
அளப்பில் பெருமை யவர்பின்னு மடுத்த தொண்டின் வழிநின்று
களத்தி னஞ்ச மணிந்தவர்தா ணிழற்கீ ழடியா ருடன்கலந்தார்

ஓத மலிநீர் விட முண்டா ரடியார் வேட மென்றுணரா
மாத ரார்கை தடிந்தகலிக் கம்பர் மலர்ச்சே வடிவணங்கிப்
பூத நாதர் திருத் தொண்டு புரிந்து புவனங் களிற் பொலிந்த
காதலன்பர் கலிநீதி யார்தம் பெருமை கட்டுரைப்பாம்.

ஸ்ரீ

கலிக்கம்ப நாயனார்

ஸ்ரீ கலிக்கம்ப நாயனர் வரலாறு

சைவம் வளர்க்க அவதரித்த நாயன்மார் அறுபத்து மூவரில் ஸ்ரீகலிக்கம்பநாயனரும் ஒருவர்:

சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, தொண்டைநாடு இதில் தலையாய நடு நாட்டுத் தலங்களில் மிகச் சிறந்த திருப்பதி யாம் பெண்ணுகடம் என்னும் பெயர்பெற்ற சிவஸ்தலத்தில் வணிக மரபிலே வந்தவதரித்த பெருமானர் நமது கலிக்கம்ப நாயனர் ஆவார்.

அருள் திரு அழகிய காதலி என வழங்கும் ஸ்ரீ ஆமோதனும் பாள் சமேத அருள்மிகு பிரளயகாலேஸ்வரர் என வழங்கும் கைவழங்கீசர் அருளாட்சி நடத்தி வரும் திருப்பெண்ணுகடத்தில் வணிகப் பெரு மக்கள் தெய்வநெறியும், அடியார்க்கு பணி செய்யும் அன்பு நெறியும் ஓங்கியிருந்த காலம் அது. அந்தக் காலத்தில் வணிகர் குலத்தில் பிறந்த கலிக்கம்பர் தமது சிவபக்தி யாலும் தாம் செய்த அடியார் தொண்டினுலும் அவர் நாயனர் ஆனர்.

தாம் செய்த தொண்டினுலே நாயனர். பிறவியாலே கலிக் கம்பர்:

அவதார மகிமை

''கலிக்கம்பர் சிவனடியார்க்கு அமுது படைத்தார். தனது அடியான் சிவனடியானக வந்தபோது பாத பூஜைக்கு மனைவி நீர் வார்க்கத் தயங்கினர். நாயனர் அம்மையார் கரத்தை வெட்டினர். ஈசனர் நாயனருக்கு முக்தி அளித்தார்.''

இந்த நாலு வரிதான் நாயனாரின் அவதார மகிமை.

இந்த நாலு வரிக்குள் இருக்கும் தத்துவம் தான் அறுபத்து மூவரில ஒருவராய் அவரை விரித்து காட்டுகிறது. இந்த நாலு வரிகளுக்குள் பொதிந்து கிடக்கும் சிவத் தொண்டு, இறைபணி, அடியார்க்கு அடியார் எனும் அடிப்படைத் தத்துவம், நிபந்தனை யற்ற அன்பு, அடியார் திருப்பணியில் மனைவியே தயங்கினாலும் வாளெடுக்கத் தயங்காத வீரம். இப்படி நாயனாரது எண்ணற்ற அருங் குணங்கள் நம்மையெல்லாம் பிரமிக்க வைக்கிறது. அன்றைய திருப்பெண்ணாகடத்தில் சந்தானாச்சாரியர் இருவர் தோன்றி சிவப்பணியாற்றிய திருத்தலத்தில் இப்படியொரு தன்னடக்கமான சைவ இறைபணியாளரும் அவதரித்திருந்தார்.

திருத்தொண்டர் திருவந்தாதி

"பொய்யைக் கடிந்துநம் புண்ணியர்க் காட்பட்டுத்
தன்னடியான்
சைவத் திருவுரு வாய்வரத் தானவன் றுள்கழுவ
வையத் தவர்முன்பு வெள்கிநீர் வாரா விட, மனைவி
கையைத் தடிந்தவன் பெண்ணா கடத்துக் கலிக்கம்பனே"

கலிக்கம்பனே என்று முடிக்கிறது திருத்தொண்டர் திருவந்தாதி.

மனைவியின் கையைக் கத்தரித்தவர் கலிக்கம்பர் என்று சொல்லியிருந்தால் அதிலே ஒன்றும் புதுமையிருந்திருக்காது.

"கலிக்கம்பனே" என்று சொல்லியிருப்பது கையைத் தரித்தவன் கலிக்கம்பனேயன்றி வேறு எவருமல்ல என்று பொருள்; வேறு யாராலும் முடியாது என்று பொருள். இப்படிப்பட்ட காரியத்தைச் செய்தவர் அவர் ஒருவராகத்தான் இருக்க முடியும் என்று பொருள்.

இதிலே திருவந்தாதி நமக்குச் சொல்லுகிற அழுத்தத்தைத் தான் கவனிக்க வேண்டும்.

இறைவனும் அடியாரும்

கலிக்கம்பர் இறைவனுக்கும் பணி செய்தார் இறையடியார்க்கும் பணி செய்தார் ஆனாலும் இந்த இரண்டிலும் மிகப் பெருத்த வேறுபாடு இருந்தது.

இறைவனுக்குச் செய்கின்ற பணி யார் செய்தாலும் அதை இறைவன் மட்டுமே பார்த்துக் கொண்டிருப்பானே தவிர மனிதர்கள் யாரும் பார்ப்பதில்லை. அதில் குற்றங் குறைகள் இருந்தாலும் ஆத்மார்த்தக் குறைவு இருந்தாலும் அதற்கெல்லாம் பரிகாரம் வேறு உலகத்தில்தான் இங்கல்ல.

இறையடியார்க்குச் செய்யும் பணி; அதிலே உள்ள தூய்மையும், நேர்மையும் தொண்டு மனப்பான்மையும் பிரதி பிரயோசனம் ஒரு சிறிதும் இல்லாத தன்மையும் உள்ளனவா என்பதை எல்லாரும் எளிதில் அறிவார்கள் அதில் ஏற்படும் குற்றம் குறைகளுக்கு இங்கே பலனும் தண்டனையும் கிடைத்துவிடும்.

நமது நாயனுர் செய்த மிகுதியான பணி இறை பணியென்பதைவிட இறையடியார் பணி என்றே கொள்ளலாம் அப்படிக் கொள்ளுவதுதான் சரியுங்கூட.

பற்ருத பற்று

நமக்கெல்லாம் பற்றுக்கோடு பல விஷயங்களில் பல கோணங்களில் இருக்கும். இருக்கின்ற பற்றுகளிலும் கூடுதல் குறைவும் இருக்கும் ஆனுல் ஆன்மீகப் பெரியவர்களுக்கு ஒன்றின் மீது பற்று என்று பதிந்து விடுமானுல் அது மற்றெதன் மீதும் பற்ருத பற்ருகத் தான் இருக்கும்.

நமது கலிக்கம்ப நாயனுர் கொண்டிருந்த பற்றினை ''சிவனடிப் பற்றின்றி மற்ருேர் பற்றில்லார்'' என்று தெய்வப் புலவர் சேக்கிழார் சுவாமிகளே போற்றிப் புகழ்ந்துள்ளார்கள்.

வழக்கமாக நாள் தோறும்; வருகின்ற சிவனடியார்களுக்கு நாயனுர் அமுது படைப்பது வழக்கம் அமுது படைப்பதுஎன்ருல், இந்தக்காலத்தில் எங்கேயோ சீட்டுகொடுப்பார்கள், எங்கேயோ உணவு அளிப்பார்கள். அமுது படைப்பவரும் அமுது உண்ணுபவரும் சந்திப்பது கூட இல்லை. அப்படிப்பட்ட நிலை இல்லை அன்று.

இதுவே அமுது படைப்பு

அமுதுண்ணும் சிவனடியார்களை அமுதளிக்கும் கொடையாளர், அவரே நேரில் சென்று அழைத்து வருவார். தமது இல்லத்தில் நூழையுமுன் அடியாரது திருவடிகளை மனைவி நீர் வார்க்க மனையான் துலக்க என்ற மரபுப்படி துலக்குவார்; பின்

மலரிட்டு—பொட்டிட்டு—பூவிட்டு பூஜிப்பார்; அதன் பின் தமது மனைக்குள் அழைத்துச் சென்று மனையாள் உள்பட தமது குடும்பத்தினர் அனைவரும் திருவடியில் வீழ்ந்து வணங்கி ஆசி பெறுவார்; அதன்பின்னரே அவரை அமர்த்தி அன்னம் பாலித்து அனைத்து உபசாரங்களும் செய்து வழியனுப்பி வைப்பார்.

நமது நாயனாரும் அப்படித் தான் நாள் தோறும் செய்து வந்தார். ஒரு நாள் வழக்கம் போல வந்த சிவனடியார்களுக்கு திருவடி துலக்கும் திருப்பணியில் ஈடுபட்டிருந்தார். அவரது தேவியார் நீர் வார்த்த வண்ணமிருந்தார். ஒரு அடியாரின் திருவடியை நாயனார் பற்றித் துலக்கத் துவங்கும்போது நாயனாரின் மனைவியார் நீர் வார்க்க சற்றே தயங்கினார். காரணம்; அந்த அடியார் முன்னம் தம்மிடம் ஏவலராக பணி புரிநதவர் என்பதே. உடனே நாயனார் வாள் கொண்டு தேவியாரின் திருக்கரம் நீக்கி விட்டார்.

தயக்கமே தவிர மறுப்பு அல்ல

தேவியார் நீர் வார்க்க சற்றே தயங்கினார்; அவ்வளவுதான்: நீர் வார்க்க மறுக்கவில்லை.

தயங்கியதற்கே கரம் வாங்கப்பட்டது என்றால் மறுத்திருந்தால் சிரம் வாங்கப்பட்டிருக்குமல்லவா? இதிலிருந்து என்ன தெரிகிறது? நாயானார் என்ன சதா சர்வ காலமும் கொலை வாளினை எடுத்து வெட்டும் குத்தும் செய்து கொண்டிருப்பவரா? அல்ல. அல்ல. அந்தப் பிரச்னையிலே அவருக்கிருந்த ஆத்மார்த்தத்தைத் தான் நாம் பார்க்க வேண்டும்.

ஆற்றுகின்ற சிவப் பணியில் நமக்கு பரிசீலனைக்கே இடம் இருக்கக் கூடாது. ஏன் எதற்கு என்ற வினாக்களே எழக்கூடாது. அப்படியொரு நிபந்தனையற்ற பணி ஒரே நோக்கோடு நடைபெற வேண்டும்.

இதைத்தான் விசிஷ்டாத்வைதத்தில் வைஷ்ணவ நண்பர்கள் சரணாகதி தத்துவம் மேற்கொள்ளும்பொழுது ''பரிபூரண சரணாகதி'' அநுஷ்டிப்பார்கள்.

அப்படிப்பட்ட நிலையிலேயே தான் நாயனார் நாள்தோறும் அடியார் பசியாற்றி வந்தமையால் அந்தச் சிறு தயக்கத்தைக் கூட அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை;

கோபத்தோடு வாள் எடுத்தாரே தவிர ஆத்திரக்காரராக மாறவில்லை. நிதானமாகவே, சிவப்பணியாற்ற தயங்கிய அம்மையாரின் அங்கம் எதுவோ அதைத்தான் துண்டித்தார்.

நீர் வார்க்கத் தயங்கிய கரத்தை மட்டுமே நீக்கினுர்.

கரம் வாங்கும் காரியம் நடைபெறுகிறபோது அவர் காட்டிய நிதானத்தை நாம் உணர வேண்டும்.

கையிலிருந்த கத்தியை எடுத்தார். அம்மையாரின் கையிலிருந்த கரகத்தைத் தம் கையில் பெற்ருர். அதன் பின்னரே அவர் கையை வெட்டினுர்.

கரக நீர்

பெரிய புராணத்தை விரித்துரைக்க வந்தவர்களெல்லாம் சொன்னதைப் போல அம்மையார் கையிலிருந்து கரக நீர் சிவப் பணிக்காக வைத்திருந்த புனித நீர். அந்தப் புனிதப் பிரசாதம் ஏந்தியிருக்கும் பொழுது ஏந்திய கை வெட்டப்படக் கூடாது என்னே நாயனுரின் நிதானம்.

''சிக்கலான நேரத்தில் தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும்''

என்பது ஷண் மதங்களை ஸ்தாபித்த ஆதி சங்கர பகவத் பாதாள் அருளிய உபதேசம்.

அந்தத் திருவாக்கை நம்முடைய கலிக்கம்பர் எழுத்துக்கு எழுத்து எவ்வளவு ஜாக்கிரதையாக செயல்படுத்தியிருக்கிருர்.

இன்றைய லௌகிகத்திலே கூடச் சொல்லுவார்கள்; அரசாங்கத்தார் ஒருவரை தண்டிக்கவேண்டி வந்தால், அவரை அரசாங்க நிலையிலிருந்து சகல அடையாளங்களையும் நீக்கிவிட்டு தண்டிக்க வேண்டும் என்று.

இதை அப்படியே அல்லவா நிறைவேற்றியிருக்கிருர் நமது நாயனுர் !

சிவப்பணியாற்றுகின்ற பெரும் பணிக்கு மத்தியிலே இப்படிப்பட்ட நீதிப் பணியினையும் செய்து முடித்த நாயனுர், தாம் செய்து வந்த பெருந்தொண்டின் வழியில் இருந்து இந்த நிகழ்ச்சியினுல் ஒருசிறிதும் சலனப்படாமல் ஆற்ருெழுக்காக தம்பணியை ஆற்றியபடியே இருந்தார்.

தன்னடியாளு சிவனடியாளு

ஒருவன் தன் அடியாளுக இருந்த வரை தனக் கேவல் புரிந்தான்.

அதே அவன் சிவனடியாளுகிவிட்ட பிறகு தான் அவனுக்கு ஏவல் புரிந்தார் கலிக்கம்பர்.

தான் மட்டுமல்ல தன் மனேவியாளேயும் பணிவிடை புரியப் பணித்தார். தயங்கிதற்குத் தண்டனேயாக தன் கையாலேயே வாள் தாங்கி கரம் கொய்தார்.

கரம் தடிந்த கலிக்கம்பர் தயங்கிய மனேவியை தயங்காமல் தண்டித்தார். தயங்கிய அந்த க்ஷணமே தண்டனேயை நிறைவேற்றினுர்.

இந்த நிகழ்ச்சியில் நடந்த காரியம் நமக்கெல்லாம் எவ்வளவு தூரம் பாடமாக அமைகிறது என்பதைவிட, நிகழ்ச்சியின் பின்னணியில் இருக்கும் தத்துவம் எப்படிப்பட்டது என்பதுதான் முக்கியம்.

கலிக்கம்ப நாயனுர் பெருமான் மனிதனுகப் பிறநது இன்று தெய்வமாய் மலர்ந்து நிற்கிருர் என்ருல் அதற்கு மிகப்பெரிய காரணம் அவர் தமது காரியங்களேயெல்லாம் தத்துவ நெறி நின்று செய்ததுதான்.

தத்துவ பூமி

திருப் பெண்ணுகடம் ஒரு பெரிய தத்துவ பூமியாயிற்றே!

தத்துவத்தின் தந்தைக்கும் தந்தையாய்—தாய்க்கும்தாயாய் ஆதாரத்திற்கே ஆதாரமாய் நின்று சைவத் தத்துவத்தை உலகெலாம் பரப்பி இன்றளவும் நிலேத்து நிற்கச் செய்துவிட்ட சிவஞான போதம் தந்து, பொய்மறைத்து மெய்காட்டிய மெய்கண்டதேவ நாயனுர் அவதாரம் செய்த திருப்பூமியல்லவா பெண்ணுவுகடம். ஆகவேதான் அங்கு அவதரித்த நாயன்மார் கலிக்கம்பர் அவர்களும் தாம் செய்த சைவத் திருப்பணிகளேயெல்லாம் தத்துவார்த்தமாகவே செய்தார் எனலாம்.

இறைவன் திருப்பணியில் ஈடுபட்ட நாயனுர் இறையடியார் திருப்பணிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். அந்தப்பணி

யில் தன்னையே அர்ப்பணித்தார். அதற்குக் குந்தகம் வந்த போது கொதித்தெழுந்தவர் அதற்காக வாளெடுக்கவும் தயங்கவில்லை. இதிலெல்லாம் இருக்கிற தத்துவ நிலையான சைவப் பணியைத்தான் நாம் பின்பற்ற வேண்டும்.

கரங்களை இழந்த அம்மையார், கலங்காது நின்று, 'கணவனாரின் திருவுளப் பாங்கு நமக்கு வரவில்லையே அது வரவேண்டுமே' என்று ஈசனாரின் பெருங்கருணையை இறைஞ்சி நின்றதாகவும், எண்ணற்ற பக்தர்களையும் அடியார்களையும் எத்தனையோ சோதனைகளுக்கு உட்படுத்தி—புனிதப் படுத்தி, மோக்ஷமளித்து தன் பால் சேர்த்துக் கொண்டிருக்கின்ற பரமேஸ்வரன், உமையவள் சமேதராய் நாயனாருக்கும் அவர் தம் மனைவியாருக்கும் காக்ஷி கொடுத்து, நாயனாரின் தேவியாருக்கு இழந்த கரங்களை மீண்டும் வழங்கியதாகவும், திருத் தூங்கானைமாடத்து சுடர்க் கொழுந்து நாதனாகிய எம்பெருமான், பிரளயங்காத்ததனாலே பிரளயகாலேஸ்வரராக, அந்தத் திருப்பெண்ணாகடத் திருப்பதி முழுமைக்கும் அருளாட்சி செய்து வந்த அந்தப் பெருமானுக்கு அன்றிலிருந்து ''கை வழங்கீசர்'' என்ற திருநாமமும் விளங்குவதாயிற்று என்றும் பெண்ணாகடத்தையும் அதைச்சுற்றியுள்ள பகுதியையும் சார்ந்துள்ள சைவ நெறியொழுகும் அன்பர் பெருமக்கள் கர்ணபரம்பரையாக வளர்த்துவரும் சரித்திரச் சான்றுகளையும் நாம் ஏற்க வேண்டும்.

கலிக்கம்பருடைய சைவப் பணியும் சமயப் பணியும் அடியார் தம் பசிப்பிணி நீக்கும் பெரும்பணியாக அமைந்துவிட்டிருந்ததன் பெருமைகளையெல்லாம் இந்தப் பகுதிவாழ் மெய்யன்பர்கள் கர்ண பரம்பரையாக—எழுதாத இலக்கியமாக வளர்த்து வருகிறார்கள்.

ஏவலர் சிவனடியாராக வந்தார் என அம்மையார் எண்ணியது தான் தவறு என்றும், சிவனடியார் ஒருவர் தான் முன்பு ஏவலராக வந்தார் என்பது தான் உண்மை என்றும் நாயனார் அம்மையாருக்கு உண்மை நிலையை உணர்த்தினார்.

அம்மையாருக்கு நேர்ந்த இந்த நிகழ்ச்சியைப் பற்றி ஒரு சிறிதும் மனம் கலங்காதவராக நாயனார் தம் பணியை எப்போதும் போலவே ஒழுங்காகவும் பக்தி சிரத்தையோடும் செய்து வந்தார்.

தன்னுடைய சுகதுக்கங்கள் எதற்குமே அவர் முக்கியத்துவம் கொடுத்தாரில்லை. ஏனென்றால் நாள் தோறும் வருகின்ற சிவ

னடியார்களையே சிவனாகக் கருதி பணி விடைகள் செய்துவந்த தால் அவருக்கு இகலோக வாழ்க்கையின் இன்ப துன்பங்கள் எதுவுமே அவரைப் பாதிக்கவில்லை.

எல்லாப் பணிகளிலுமே அவர் இறையுணர்வு கொண்டதால் பேரின்பம் தவிர அவருக்கு எதுவுமே சிற்றின்பமாகப் படுவ தில்லை.

அவர் வாழ்ந்த காலத்தில் திருப்பெண்ணாகடத்தின் கீழ் பகுதி முழுவதும் சைவ மெய்யன்பர்கள் பெரிதும் வாழ்ந்து வந்தனர், அவர்கள் செய்கின்ற வணிகத்தில் நேர்மையே மிகுந்திருந்தது.

நாயனார் பிறந்த வாணிய குலத்தினர் அனைவருக்கும் வாணி பமே தொழிலானதால் அந்தத் தொழிலிலேயே அவர்கள் நேர்மையோடும் நாணயத்தோடும் நடந்து சைவத் திருப்பணி களும் செய்து வந்தனர். அவர்கள் மத்தியில் நமது கலிக்கம்ப நாயனார் தாம் ஈட்டிய பொருள் எவ்வளவாயினும் அதில் ஒரு சிறிதே தமது சொந்தத் தேவைக்குப் பயன்படுத்திக் கொண்டு எஞ்சிய பெரும் பொருளையெல்லாம் சிவனுக்கும் சிவனடியார்க் குமே செலவழித்து வந்தார்.

இப்படி பசிப்பிணியாற்றியதாலே சமூகப் பணியாற்றினார்.

அதையும் அடியார்க்கு செய்ததால் அதன் மூலம் இறைபணி யாற்றினார்.

திருஞான சம்பந்தராலும்—திருநாவுக்கரசு நாயனாராலும் பாடப் பெற்ற திருத்தலமாம் பெண்ணாகடம் பதியில் தமது வாழ்நாளின் இறுதிக் காலம் வரை இறைபணியாற்றி இறுதியில் சிவனடி சேர்ந்து முக்தி பெற்றார்.

சுபம்.

ஸ்ரீ

கலிய நாயனார்

பெரியபுராணத்தில் ஸ்ரீ சேக்கிழார் அருளிய

கலிய நாயனர்

பாக்கள்

பேருலகி லோங்குபுகழ்ப் பெருந்தொண்டை நன்னுட்டு
நீருலவுஞ் சடைக்கற்றை நிருத்தர்திருப் பதியாகுங்
காருலவு மலர்ச்சோலைக் கன்னிமதில் புடைசூழ்ந்து
தேருலவு நெடுவீதி சிறந்ததிரு வொற்றியூர்;

பீடுகெழும் பெருந்தெருவும் புத்தருடன் பீலியமண்
வேடமுடை யவர்பொருள்போ லாகாச வெளிமறைக்கும்
ஆடுகொடி மணிநெடுமா ளிகைநிரைக ளலைகமுகின்
காடனைய கடல்படப்பை யெனவிளங்குங் கவின்காட்டும்;

பன்னுதிருப் பதிகவிசைப் பாட்டோவா மண்டபங்கள்;
அன்னநடை மடவார்க ளாட்டோவா வணியரங்கு;
பன்முறைதூ ரியமுழங்கு விழவோவா பயில்வீதி;
செந்நெலடி சிற்பிறங்க லுணவாவா திருமடங்கள்

கெழுமலர்மா தவிபுன்னை கிளைஞாழ றளையவிழுங்
கொழுமுகைய சண்பகங்கள் குளிர்செருந்தி வளர்கைதை
முழுமணமே முந்நீருங் கமழமலர் முருகுயிர்க்கும்;
செழுநிலவின் றுகளனைய மணற்பரப்பின் றிருப்பரப்பு.

எயிலணையு முகின்முழக்கு மெறிதிரைவே லையின்முழக்கும்
பயிறருபல் லியமுழக்கு முறைதெரியாப் பதியதனுள்
வெயிலணிபன் மணிமுதலாம் விழுப்பொருளா வனவிளக்கும்
தயிலவினைத் தொழின்மரபிற் சக்கரப்பா டித்தெருவு

ஸ்ரீ கலிய நாயனார் வரலாறு

திருவொற்றியூர்

இவ்வுலகில் புகழினால் ஓங்கிய பெருமையுடைய தொண்டை நன்னாட்டினில் சிவபெருமான் எழுந்தருளிய திருப்பதிகளுள் சிறந்தது திருவொற்றியூர் என்னும் பதியாகும். அங்கே, மேகங்கள் உலாவும் நிறைந்த மலர்ச்சோலைகளும், மதில்களும் சூழ்ந்து விளங்கும்; தேர் உலவும் நீண்ட பெரிய வீதிகளும் திகழும்; ஆடுகின்ற கொடிகளையுடைய மாடங்களின் வரிசைகள், அசையும் கமுகஞ் சோலையின் ஒத்து விளங்கும்; நகரத்தை அடுத்த கடல், பயிர்களையுடைய தோட்டம் போலும் அழகினைக் காட்டும்; மண்டபங்கள், இடைவிடாமல், ஓதப் படுகின்ற திருப்பதிகங்களின் இசைப் பாட்டுக்களை உடையன: அரங்குகள், மாதர்களின் ஆடல்களை நீங்காமல் உடையன; மக்கள் நடமாடும் வீதிகள், இசைக் கருவிகள் முழக்குடன் கூடிய விழாக்களை உடையன; திருமடங்கள் செந்நெல் அரிசியால் சமைக்கப்பட்டு மலை போலக் குவிந்திருக்கும் உணவுப் பெருக்கத்தினை உடையன; மலர்களையுடைய குருக்கத்திகளும், செருந்தி மரங்களும், தாழைகளும் கடல் நீரும் முழுமணமே கமழத் தத்தம் மலர்களின் வாசனையைத் தரும்; கடற்கரையின் வெண்மணற் பரப்பு, செழுவிய நிலவின் கதிர்கள் சிதறிய துகள்களைப் போன்று விளங்கிக் கொண்டிருக்கும்; மதில்களை நெருங்கும் மேகங்களின் முழக்கமும், அலைகளை வீசுகின்ற கடலின் முழக்கமும் மக்கள் பயிலப்படுகின்ற பல இசைக் கருவிகளின் முழக்கமும் ஆகிய இவை ஒன்று கூடிப் பிரித்தறிய முடியாதபடி ஒலிக்கும்.

கலியனார் பண்பு

வளம் நிறைந்த திருவொற்றியூரில் எண்ணெய் ஆட்டும் செக்குத் தொழிலுடைய மரபினர் வாழ்கின்ற [1] சக்கரப்பாடித்

---

[1] இப்பெயர் கலி நீதிநாயனார் என்றும் குறிக்கப் பெற்றுள்ளது.

தெரு என்பது, ஒளி வீசும் பலவகை மணி முதலாகிய தூய் பொருள்கள் திகழுமிடமாகும். இங்குச் செக்கார் குலம் செய்த முன்னைத் தவப்பயனால் [2] கலியர் என்பவர்; வந்து அவதரித்தார். அவர் சைவ சமயத்தில் சிறப்புற விளங்கியவர்: சிவபெருமானுக்குத் திருத்தொண்டு செய்யும் நெறியில் நின்றவர்; தமது அளவற்ற செல்வத்தைக் கொண்டு திருவொற்றியூர் இறைவரது திருக்கோயிலின் உள்ளும் புறமும், இரவும், பகலும் திருவிளக்கு இடுகின்ற திருப்பணியில் ஈடுபட்டு அழகுறச் செய்து வந்தவர்.

இறைவர் சோதித்தல்

நீண்ட நாட்கள் எண்ணில்லாத திருவிளக்கு எரிந்து வந்த சிவ புண்ணியத்தின் உறைப்பினையுடைய மெய்த் தொண்டராகிய கலியனாரின் திருத்தொண்டை உலகுக்கு எடுத்துக்காட்ட விரும்பிய சிவ பெருமானின் திருவருளினாலே பெருஞ் செல்வம் உயரும் நிலை நீங்கியது; அவரது இருவினைகளும் சிவ புண்ணியத்தால் மாண்டொழிந்தன போலச் செல்வமும் பெருமையாகவே மாண்டது. செல்வம் அழிந்த பின்னும் தம் திருப்பணியினின்றும் பெயராத பெருமையுடைய கலியனார் தமது மரபில் செல்வ முள்ளோர்களிடத்தில் எண்ணெய் வாங்கிக் கொண்டு போய் விற்றுக் கொடுத்து அதனால் அவர் தரும் கூலியைக் கொண்டு திருவிளக்கேற்றும் தமது பணியினைச் செய்து வந்தார். நாளடைவில் எண்ணெய் எடுத்து விற்கும் தொழிலும் செல்வர்கள் எண்ணெய் கொடாமையால் தடைப்பட அதனால் அவர் மனம் தளர்ச்சி அடைந்து எண்ணெய்ச்செக்கு ஆட்டுமிடத்திற்குச் சென்று பணி செய்து அதனால் கூலியினைப்பெற விரும்பினார். செக்கு நிறையும் அளவுப்படி எள் இட்டு ஆட்டிப் பதம் தெரிந்து எள்ளினின்றும் எண்ணெய் பக்கங்களில் எழுதலைக் கண்டும் செக்கினை வட்டமாகச் சுற்றி வரும் எருதுகளை ஓட்டும் தொழில் புரிந்தும், அத்தொழிலால் பெறும் கூலியினைத் தாம் கைக்கொண்டு வழுவாமல் விளக்கேற்றி எரிக்கும், திருப்பனியைச் செய்து வந்தார். அத்தொழில் செய்வோர் தொகை பெருகினமையால் அத்தொழிலில் கிடைத்து வந்த வருவாய் முட்டுப் பாடுற்றது. அப்போது அவர் மிக்க மனக்கவலை கொண்டு தமதுவீட்டினை விற்றுத் திரு விளக்கிட்டுவந்தார். அப்பொருளும்

---

1. சக்கரப்பாடி-இது சக்கர எந்திரத்தால் தொழில் செய்து வாழும் மரபினர் உள்ள இடம் என்பர்.

2, கலியர்-கலியிற் சிறந்தவர்; வலிமை-வீரம்,

தீர்ந்த பின்பு சிறப்பினையுடைய தம் மனைவியாரை விற்றுப் பொருள் பெற்றும் பணிபுரிவதற்கு வழி தேடினுர்; மனமகிழ்ச்சியோடு மனைவியாரை அழைத்துச் சென்று திருவொற்றியூர் முழுதும் விலை கூறினுர்; பொருள் கொடுப்பார்களை எங்கும் காணுது தளர்ச்சியுற்றுர். பிறகு திருவிளக்குப்பணி முட்டுதலை இதன் மூன்பு கனவிலும் அறியாதவராகிய கலியனுர் வேறு செயலற்ற தன்மையினுலே திருக்கோயிலை வந்தடைந்தார்.

தம்மை அடிமைகொண்டு தமது பணியினை ஏற்றருளும் படம்பக்கநாதரின் திருக்கோயிலினுள்ளே அழகு நிறையும் திருவிளக்கேற்றுஞ் சமயத்திலே, ''திருவிளக்குப்பணி நின்று படுமாயின் நான் மாள்வதே தகுதி' என்ற துணிவினைக் கொண்டார்; திருவிளக்குகளுக்கு எல்லாம் திரியினை இட்டு அங்கு அகல்களை முறையாகப் பரப்பிவைத்து தமது திருத்தொண்டு வழுவாது நடைபெறும் பொருட்டு எண்ணெய்க்குப் பதிலாகத் தம் உடலில் நிறைந்த இரத்தத்தைக் கொண்டு நிறைக்க எண்ணிக்குருவிக் கொண்டு தமது கழுத்தினை அரிந்தார். அப்போது சிவபெருமான் பெருங்கருணையோடு நேரே வெளிப்பட்டு வந்து, அரியும் கையினைப் பிடித்தருளிக் கலியநாயனுரின் முன்பு இளமை பொந்திய இடபத்தின் மேல் எழுந்தருளி வந்து காட்சி தந்தருளினுர். கலியநாயனுர் தம் கழுத்தில் பட்ட ஊறு நீங்கி ஒளிபெற்றுவிளங்கச் சிறமேற் கைகளைக் கூப்பி வணங்கினுர். சிவபெருமான் அவருக்கு அழகிய சிவலோகத்தில் சிறப்புற்றிருக்கும்படி திருவருள் பாலித்தருளினுர்.

திருவிளக்கு திரியிட்டங்(கு) அகல்பரப்பிச் செயல்நிரம்ப
ஒருவியஎண் ணெய்க்கீடா உடலுதிரங் கொடுநிறைக்கக்
கருவியினுல் மிடறரிய அத்தகையக் கண்ணுதலார்
பெருகுதிருக் கருணையுடன் நேர்வந்து பிடித்தருளி.

மற்றவர்தம் முன்னுகை மழவிடைமேல் எழுந்தருள
உற்றவூ(று) அதுநீங்கி ஒருவிளங்க உச்சியின்மேற்
பற்றியஅஞ் சலியினராய் நின்றவரைப் பரமர்தாம்
பொற்புடைய சிவபுரியிற் பொலிந்திருக்க அருள்புரிந்தார்.

''கலியன்றன் அடியார்க்கும் அடியேன்''

திருவிருத்தம்-17
ஆகத்திருவிருத்தம்-1,043

இந்த நூல்

20—4—86 அன்று நடைபெற்ற
பெண்ணுடம் ஸ்ரீ கலிக்கம்ப நாயனுர் மடாலய
கட்டிட கால்கோள் விழாவின்போது

○

திரு. P. M. நாமதேவ் செட்டியார்

(தலைவர் : சென்னை வணிக வைசிய கல்யாண மண்டப
நிர்வாக சங்கம்)

அவர்கள் தலைமையில்

★

திரு. சிவ. சிவராமலிங்கம் M. A:

(தமிழ்த்துறைத் தலைவர் SIVET கல்லூரி,
கௌரிவாக்கம், சென்னை.)

அவர்களால் வெளியிடப்பட்டது.